# விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

**வகுப்பு : 11 பாடம் : தமிழ்**

**DATE: 26 – July - 2021 T – 14 No. of Pages:08**

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்** :

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசி அருகே உள்ள சாம்பவர் ।iவடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றிய பின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார் .மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழ் இசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத் தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்' 71 ஆண்டுகள் வாழ்ந்து தமிழுக்கு தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்களுக்கு விடையளிக்க** :

1.உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக

**விடை** :

இயக்கம், என்னும், சிற்றூரில், ,மருத்துவம், மக்கள், சித்த,மருத்துவத்தில், செலுத்தி அழைக்க, அமைப்பை, உருவாக்கி, நடத்தினார் .

2.வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக

**விடை**

தந்தை, என்று, பண்டிதர், பிறந்தவர், பயின்றார் ,அன்புடன் ,பாண்டவர், ஆண்டு, நடந்த

3.உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள

சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக:

**விடை** :

விருப்பம், கல்லில், அழைக்க, எல்லாம், வித்யா - உடனிலை மெய்ம்மயக்கம்

கொண்டு, நுட்பம், திண்டு, தொடங்கி, நூல்களை, சங்கீத - வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

4.கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.

அ)சங்கீதம் - இசை ஆ) வித்தியா - கலை அறிவு இ) மகாஜனம் - பெருமக்கள்

ஈ)சாகரம் - கடல் (ஆழி)

5.இலக்கணக் குறிப்பும் பகுபத உறுப்பிலக்கணமும் தருக :

அ) பயின்றார் ஆ) தொடங்கினார்

**விடை** :

அ) பயின்றார் - படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று

ஆ) தொடங்கினார் - படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று

பகுபத உறுப்பிலக்கணம் :

அ) பயின்றார்

பயில்(ன்) + ற் + ஆர்

பயில் - பகுதி,' ல்','ன்' ஆனது விகாரம், ற் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

ஆ) தொடங்கினார் -

தொடங்கு - பகுதி

இன்- இறந்த கால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி .

**தமிழாக்கம் தருக** :

1.Just living is not enough,One must have sunshine,freedom and a little flower - Hans Anderson

**விடை**:

ஏதோ வாழ்ந்தோம் என்பது மட்டும் போதாது. ஒருவன், சூரிய ஒளியில் பிரகாசித்துச் சுதந்திரமாக ஒரு சிறு மலர் போல் விளங்க வேண்டும் .- ஹென்ஸ் ஆண்டர்சன்

2.In nature, light creates the colour ,In the picture,colour creates the light - Hans Hofmann

**விடை**:

இயற்கையில், ஒளி என்பது வண்ணங்களைக் காட்சிப்படுத்துகிறது ஓவியங்களில் வண்ணங்கள் ஒளியை உருவாக்குகின்றன . - ஹென்ஸ் ஹோா.ஃப்மன்

3.Look deep into nature and then you will understand everything better - Albert Einstein

**விடை**:

இயற்கையை ஆழ்ந்து நோக்குங்கள், அப்போது எல்லாவற்றைப் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் . - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

4.Simplicity is nature's. first step,and the last of art - Philip. James Bailey

**விடை**:

எளிமை என்பது இயற்கையின் முதல்படி; அதுவே கலையின் இறுதிநிலை - பிலிப் ஜேம்ஸ் பெய்லி

5.Roads were made for journeys not destinations - Confucius

**விடை**:

சாலைகள் பயணம் செய்வதற்காக உருவாக்கப்பட்டவை. குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு அல்ல . - கன்ஃபுஷியஸ்

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**:

1.உலை, உளை, உழை

**விடை**: மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

2.வலி,வளி,வழி

**விடை**: கடுமையான வளி வீசியதால் வழி அறியாமல் ஓடி விழுந்ததால் உடலுக்கு வலி ஏற்பட்டது .

3.கலை, களை, கழை

**விடை**: இனிக்கும் கழைப் பயிரில் களை எடுப்பது ஒரு கலை .

4.கனை ,கணை :

**விடை** : குதிரை கனைத்ததால், வீரன் கணை வீசினான் .

5.குரை,குறை

**விடை** : நாய் குரைக்காமல் போனது பெரிய குறைதான்.

6.பொரி, பொறி

**விடை** : சோளம் பொரிக்கப் பொறியைப் பயன்படுத்துகின்றனர் .

**கீழ்க்காணும் விளம்பரத்தை பத்தியாக மாற்றி அமைக்க** :

**செய்திப்பத்தி**

சென்னை தீவுத்திடலில் தை மாதம் 5 முதல் 11 வரை மாலை 6 முதல் இரவு 10 மணி வரை இயற்கை உணவு திருவிழா நடைபெற இருக்கிறது. அங்கு ஆவாரம் பூச்சாறு குதிரைவாலிப் பொங்கல், வாழைப்பூ வடை, தினைப் பணியாரம், வல்லாரை ,அப்பளம், முடக்கத்தான் தோசை,தூதுவளைச் சாறு, சாமைப் பாயசம் ,கேழ்வரகு உப்புமா ,கம்புப்புட்டு, அகத்திப்பூப் போண்டா, முள் முருங்கை அடை மற்றும் பல கிடைக்கும் .இவற்றை உண்டு உடலையும் உயிரையும் பேணி வளருங்கள்.

**இலக்கிய நயம் பாராட்டுக** :

குறிப்புச்சட்டகம்

1.ஆசிரியர் குறிப்பு

2.திரண்ட க்கருத்து

3.மையக்கருத்து

4.மோனை நயம்

5.எதுகை நயம்

6.இயைபுத் தொடை

7.முரண்தொடை

8.அணிநயம்

9.சந்த நயம்

10.சுவை நயம்

11.தலைப்பு

**ஆசிரியர் குறிப்பு:**

ஆசிரியரின் பெயர் : கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

பிறந்த இடம் : குமரி மாவட்டம், தேரூர்

சிறப்புப் பெயர் : விடுதலைக் கவிஞர், தேசியக்கவிஞர் ,குழந்தை க்கவிஞர், சமுதாயக்கவிஞர் ,உணர்ச்சிக் கவிஞர்

படைப்புகள் : மலரும் மாலையும், ஆசியஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் .

**திரண்ட கருத்து:**

"வாழைக்கு அழகு குருத்து
பாடலுக்கு அழகு கருத்து "

கோடி கோடி விண்மீன்கள் சூழ்ந்திருக்க அதில் வெள்ளி யோடம் போல் இருக்கும் வெண்ணிலாவே என்றும்; வளர்ந்து வளர்ந்து முழு நிலவாக வரும் நீ மீண்டும் வாடி வாடிப் போவது எதனாலோ என்றும்; கூகை,ஆந்தை போல் நீயும் பகலில் தூங்கி விடுவாயா என்றும்; நாங்கள் உன்னைப் பந்தை அடிப்பது போல் அடிப்போம் என்று நீ உலகில் வரப் பயம் கொள்கிறாயோ என்று நிலவோடு பேசும் உயிரோவியத்தை நயத்தோடு இயம்புகிறார் கவிமணி அவர்கள் .

**மையக்கருத்து**

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் வெண்ணிலாவை உவமைப்படுத்தி அழகாகப் பாடியுள்ளார்.

**மோனை நயம்**

"மன்னனுக்குத் தேவை சேனை

பாடலுக்குத் தேவை மோனை "

ஒரு செய்யுளில் சீர்களிலோ அடிகளிலோ முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயம் ஆகும் .

எ.கா

வளர்ந்து வளர்ந்து

வாடி வாடிப்

**எதுகை நயம்** :

"மதுரைக்கு அழகு வைகை

பாடலுக்கு அழகு எதுகை "

ஒரு செய்யுளில் சீர்களிலோ அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது

எதுகை நயம் ஆகும்.

எ.கா

வெண்ணிலாவே

வெண்ணிலாவே

ஆந்தை போல

பந்தடிப்போம்

**இயைபுத் தொடை**

செய்யுளில் கடைசி எழுத்தோ ,சீரோ, அசையோ ஒன்றி வரத் தொடுப்பது ஏதுவாகும் ஒன்றி வரத் தொடுப்பதுஇயைபுத் தொடையாகும் .

எ.கா

வெண்ணிலாவே

வெண்ணிலாவே

**முரண்தொடை** :

"முரண் இல்லாப் பாட்டு

அரண் இல்லாக் கோட்டை" போன்றது"

ஒரு செய்யுளில் எதிரெதிரான சொற்கள் வருவது முரண்தொடை ஆகும் .

எ.கா

வளர்ந்து வளர்ந்து × வாடி வாடி

**அணிநயம்**

"அணியற்றப் பாடல் அழகற்றுப்போகும் "

இப்பாடல் உவமை அணி பயின்று வந்துள்ளது ..

**சந்த நயம்**:

"சந்தமில்லாப் பாட்டு ,சொந்தமில்லா வீடு போன்றது"

இப்பாடலில் ஆசிரியர் வெண்ணிலாவின் அழகினை அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாவில் அழகுபட சந்தசந்த நயத்தோடு த்தோடு பாடியுள்ளார் .

**சுவை நயம்**:

உணவுக்கு தேவை அறுசுவை.

செயலுக்கு தேவை ஒன்பான் சுவை"

நகை, அழுகை, இளிவரல் ,மருட்கை, அச்சம் ,பெருமிதம் வெகுளி உவகை சமநிலை போன்ற ஒன்பான் சுவைகளில் ஒன்றானஉவகைச் சுவையில் பாடல் பாடப்பட்டுள்ளது .

**தலைப்பு** :

தலைப்பில்லாப் பாட்டு தலையில்லாத உடல் போல்". ஆகையால் பாடலுக்கு உலா வரும் நிலா என்ற தலைப்பு பொருத்தமானதாகும் ப்பாட்டு தலையில்லாத உடல் போல்." ஆகையால்இப் பாடலுக்கு உலா வரும் நிலா என்ற தலைப்பு பொருத்தமானதாகும் .

**எண்ணங்களை எழுத்தாக்குக:**

எண்ணங்களை எழுத்தாக்குக.



படத்தைப் பார்த்தாயா? மரங்களை வெட்டியது யார்? மனிதன் தானே! ஒரு மரம் வளர எத்தனை ஆண்டுகள் ஆகும்? வெட்டி வீழ்த்தச் சில மணி போதும்! வளர்க்க முடியுமா? அந்த மரம் தந்த பயனை அறியாதவனா வெட்டியவன்? சுயநலம்! சுயநலம்.தன் சுகம் ஒன்றே கருத்து. காடுகளை அழித்தால் மழை வருமா? தூய காற்று தான் கிடைக்குமா?

சூரியன் ஏன் தகிக்கிறான் .மரங்களை வெட்டியவனை மட்டுமல்ல ,அதைத் தடுக்காதவனையும் அழிக்கத்தானே தகிக்கிறான்! இந்த ஒற்றை மரமாவது இளைப்பாற நிற்குமா? இல்வேர் முடிச்சுகள் இதையும் பாதி அளவு வெட்டித்தானே விட்டுள்ளனர். மீதியையும் வெட்டுவர். அனுபவித்தாலும் புத்தி வராது. அது அழிவை பற்றி நினையாதவர் செயல்.

**கலைச்சொல் அறிவோம் :**

1.இயற்கை வேளாண்மை - Organic Farming

2.இரசாயன உரங்கள் - Chemical Fertilizers

3.ஒட்டு விதை - Shell seeds

4தொழு உரம் - Farmyard Manure

5.மதிப்புக் கூட்டுப் பொருள் - Value.added product

6.வேர் முடிச்சுகள் - Root Nodes

7.தூக்கணாங்குருவி - weaver bird

8.அறுவடை - Harvesting